www.padippakam.com



# நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை தரைமட்டமாக்கிய ஒலிவேரா

33


வருண குலத்தானுக்குப் பின் சின்ன மீகாப்பிள்ளை ஆராட்சி என்பவன், யாழ்ப்பாணத்து அரச குமாரிகள் இருவருடன் தஞ்சாவூர் சென்று அவர்களை தஞ்சை அரசனின் பாதுகாப்பில் விட்டுவிட்டு, அவனது உதவியுடன் தமிழ்படை ஒன்றை திரட்டிக்கொண்டு, தொண்டமானாற்றில் வந்து இறங்கி, புத்தூர் கோப்பாய் வழியாக நல்லூருக்குச் சென்று ஒலிவேராவின் வசமிருந்த நல்லூர் அரண்மனையை முற்றுகையிட்டான்.

சின்ன மீகாப்பிள்ளையின் படைகள் தமிழகக் கரையிலிருந்து புறப்படுவதற்கு முன்பே, யாழ்ப்பாணத்திலிருந்த தங்களது விசுவாசிகள் மூலம் அதைத் தெரிந்துகொண்ட, கொழும்பிலிருந்த போர்த்துக்கேயத் தேசாதிபதி லூயி தி தெயிச்சேறா தி மச்சேடோ (Luis de Teyxeyra de Machedo) என்பவனின் தலைமையில் ஒரு படையை யாழ்ப்பாணத்திலிருந்த ஒலிவேராவுக்கு உதவும் வண்ணம் அனுப்பி வைத்தான்.

நிறவெறியும், ஆதிக்க வெறியும் கொண்ட மச்சேடோ தனது படைகளுடன் கடல் வழியாக மன்னாரில் வந்து இறங்கி, அங்கிருந்து தரை மார்க்கமாக பூநகரிக்கும் பின்பு கடல் . மார்க்கமாக யாழ்ப்பாணக் கரைக்கும் வரும்வரை மிகப்பெரிய இனப் படுகொலையை செய்துகொண்டு வந்ததாக வரலாற்றுக் குறிப்புக்களில் இருந்து அறியக் கூடியதாக இருக்கிறது.

போர்த்துக்கேயருக்கு எதிராக எதிர்காலத்தில் தமிழர்கள் யாரும் போர் தொடுக்க முன்வரக் கூடாது என்பதற்காக, அவன் தான் வரும் வழியில் கண்ட தமிழ் ஆடவர்களை வெட்டிக் கொன்று அவர்களது நெஞ்சைப் பிளந்தும், கர்ப்பிணிப் பெண்களின் வயிற்றைக் கிழித்து அதற்குள் இருந்த சிசுக்களை தெருவில் வீசி எறிந்தும், தாய்மாரின் மடியில் படுத்து பால் குடித்துக் கொண்டிருந்த குழந்தைகளை அவற்றின் வாயினூடாக வாளைச் செருகிக் கொன்றும் அவற்றின் தாய்மாரின் வயிற்றைக் கிழித்து அதற்குள் அந்தக் குழந்தைகளின் உடலைத் திணித்தும், வார்த்தைகளால் சொல்ல முடியாத கொடுமைகளையும், அட்டூழியங்களையும் செய்ததாக தெரிய வருகிறது.

ஒலிவேரா, மச்சேடோவின் படைகள் வந்து சேர்ந்ததும், நல்லூர் அரண்மனைக்கு அண்மையிலுள்ள குளமொன்றின் அருகே முகாமிட்டிருந்த சின்ன மீகாப் பிள்ளையின் படை மீது தாக்குதல் நடாத்தத் தொடங்கினான். தமிழர் படை நீண்ட தூரம் நடந்தும் கடற் பயணம் செய்தும் வந்ததால் சற்றுக் களைப்புற்றுப் போயிருந்தது. அதைவிட அந்தப் படையிலிருந்த சிலர் நோய்வாய்ப்பட்டும் இருந்தனர். இந்த நிலையில் ஒலிவேரா பீரங்கிகள், துப்பாக்கிகள் கொண்டு தாக்கத் தொடங்கியதும், தமிழர் படைக்கு பெருத்த இழப்பு ஏற்பட்டது.



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

## வரலாற்றுத் தொடர்

இதற்கிடையில் சின்ன மீகாப் பிள்ளை தஞ்சை அரசனுடைய படைகளுடன் யாழ்ப்பாணத்திற்கு வந்திருப்பதால் போர்த்துக்கேயர் தோற்பது நிச்சயம் எனக் கருதிய, நல்லூர் பிரதானிகள் சிலர் அவ்வாறு சின்ன மீகாப் பிள்ளையின் படையினர் வெற்றி பெறும் பட்சத்தில் தங்களுக்கு அரசனாக்குவதற்கென்று, இராமேஸ்வரத்திலிருந்து ஒரு அரச குமாரனையும், அவனுக்குத் துணையாக 900 மறவர் படையையும் வரவழைத்திருந்தனர்.

இந்த அரச குமாரனும் மறவர் படையும் நல்லூர் அரண்மனைக்குச் சமீபத்தில் இருந்த கோவில் ஒன்றுக்குள் மறைந்திருந்தது. இந்த விடயம் ஒலிவேராவுக்குத் தெரிந்துவிட அவன், தனது படைகளை சின்ன மீகாப் பிள்ளையின் படைகளுடன் தொடர்ந்து போராடும்படி கூறிவிட்டு இரவு ஒரு சிறு படையுடன் இரகசியமாக அந்தக் கோவிலுக்குள் வந்து அதன் நாற்புறமும் தீ வைத்தான். நல்ல உறக்கத்திலிருந்த மறவர்கள், திடீரென கோவிலில் தீப்பற்றியதைக் கண்டு அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடிவர தயாராக இருந்த ஒலிவேராவின் படைகள் அவர்களை வெட்டிக் கொன்றன. கோவில் மடப்பள்ளிக்குள் ஒழிந்திருந்த அரசகுமாரனை, அந்தக் கோவில் பிராமணன் காட்டிக் கொடுத்துவிட அவனைக் கொல்லாமல் கைது செய்த ஒலிவேரா, அவனது கைகளிலும் கால்களிலும் விலங்கு பூட்டி கொழும்புக்கு அனுப்பிவைத்தான்.

அத்தோடு நல்லூர் அரண்மனையின் மறுபுறத்தில் சண்டை செய்து கொண்டிருந்த தனது படைகள் ஒலிவேராவின் படைகளிடம் தோல்வியடைவதைக் கண்ட சின்ன மீகாப்பிள்ளை அங்கிருந்து பின்வாங்கி தமிழ் நாட்டுக்குத் தப்பிச்சென்று விட்டான். இந்தச் சம்பவம் கி.பி. 1620 ஏப்பிரல் மாதத்திற்கு முன் நடந்ததாக அறியப் படுகிறது.

தமிழகத்திற்குச் சென்ற சின்ன மீகாப்பிள்ளை மீண்டும் கி.பி. 1620 நவம்பரில் புதிய படை ஒன்றுடன் வந்து பட்டணத் துறையில் இறங்கினான். இம்முறை அவன் வருவதை அறிந்த ஒலிவேரா தனது படைகளுடன் கடற்கரைக்கே வந்து அவர்களை தரையிறங்க விடாமல் தடுத்துப் போர் செய்தான். முந்திய போரைவிட இந்தப் போர் உக்கிரமானதாக இருந்தது. இரு தரப்பாரும் சளைக்காது போரிட்டனர். சின்ன மீகாப்பிள்ளையின் படைத் தலைவன் ஒருவன் ஏறிந்த ஈட்டி ஒலிவேராவின் மார்பில் பாய்ந்துவிட அவன் படுகாயமுற்று குதிரையில் இருந்து கீழே விழுந்துவிட்டான். அத்தோடு போர்த்துக்கேயர் படை தோற்றுவிடும் என எதிர்பார்த்து தமிழர் படை உக்கிரமாகத் தாக்கியது. ஆனாலும் போர்த்துக்கேயர் தீர்த்த துப்பாக்கி வேட்டினால் தமிழர் படைத் தளபதி கொல்லப்பட்டுவிட, தமிழர் படையின் உற்சாகம் குறைந்து போனது. அவர்கள் போர்த்துக்கேயரினது பீரங்கிக் குண்டுகளுக்கும் துப்பாக்கி வேட்டுகளுக்கும் மாளாது பின்வாங்கத் தொடங்கினர்.

இதைக் கண்டு உற்சாகமடைந்த போர்த்துக்கேயப் படை தமிழர் படையை மேலும் உக்கிரமாகத் தாக்கி தமிழ்நாட்டுக்கே திரும்பி ஓடச் செய்துவிட்டு, காயமடைந்த ஒலிவேராவை அரண்மனைக்குத் தூக்கிச் சென்றனர்.

அதன்பின் மீண்டும் இரண்டு முறை தஞ்சாவூர் படைகள் நல்லூருக்கு வந்து ஒலிவேராவின் படைகளுடன் போரிட்டுத் தோற்றதாக அவன் எழுதி வைத்துள்ள நாட் குறிப்பிலிருந்து அறிய முடிகிறது.

இவ்வாறு தஞ்சாவூர் படையெடுப்பின் காரணமாக நல்லூரில் அடிக்கடி சண்டை நடைபெறுவதன் காரணமாக அங்கே பலமான கோட்டை ஒன்றைக் கட்டுவதற்கு போர்த்துக்கேயர் திட்டமிட்டனர். இந்தக் கோட்டை கட்டும் பணியை செய்வதற்கு ஒலிவேராவுக்கு உதவுவதற்கு என கொழும்புத் தேசாதிபதியால் ,கலவல் என்பவனின் தலைமையில் மேலதிகப் படை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

கி.பி. 1621-ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் பட்டணத்துறையில் இருந்து நல்லூருக்குத் தனது இருப்பிடத்தை மாற்றிய ஒலிவேரா முதல் வேலையாக அங்கிருந்த பிரமாண்டமான நல்லூர் கந்தசுவாமி கோவிலை இடித்துத் தரைமட்டமாக்கி அதன் அத்திவாரத்தையும் கிளறி அந்தக் கற்களைக் கொண்டு கோட்டையையும், வீடுகளையும் கட்டுவித்தான். நல்லூர் கந்தசுவாமி கோவிலை இடித்த போது, கிடைத்த தங்க நகைகள், இரத்தினக் கற்கள் என்பவற்றால் பேராசை கொண்ட ஒலிவேரா மற்ற இந்துக் கோவில்களிலும் அவ்வாறு கிடைக்கும் என எண்ணி எல்லாப் பெரிய கோவில்களையும் இடிக்கும்படி கட்டளையிட்டான்.

இதனையறிந்த கோவிலதிகாரிகளும், பிராமணர்களும் பெறுமதிமிக்க தங்க நகைகள் இரத்தினக் கல் பதித்த 'வேல்' முதலான வகைகளை நிலத்திற்குள் புதைத்து விட்டும் விக்கிரங்களை கிணற்றுக்குள் தூக்கிப்போட்டுவிட்டும் தலைமறைவானார்கள்.

இதனால் ஏமாற்றமும் கோபமும் அடைந்த ஒலிவேரா தனது படைகளை விட்டு யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்த அனைத்து இந்து ஆலயங்களையும் இடித்துத் தரைமட்டமாக்கினான்.

குடாநாட்டில் நிலைமை இவ்வாறிருக்க மற்ற இடங்களிலிருந்த போர்த்துக்கேயத் தளபதிகள், தங்கள் தங்கள் இடங்களில் இருந்த இந்துக் கோவில்களை இடித்து அங்கிருந்த பணம் நகைகளைக் கொள்ளையிட்டனர்.

கி.பி. 1552-ல் சீதாவாக்கை என்னுமிடத்தில் இருந்த '20 வருடங்களாக 2,000 சிற்பக் கலைஞர்கள் நாள்தோறும் சேவை செய்து கட்டிய 'பெறண்டி' என்று அழைக்கப்படும் வைரவ ஆண்டி' கோயிலையும், கி.பி. 1575-ல் பிரசித்தி பெற்ற முன்னேஸ்வரம் சிவாலயத்தையும், கி.பி. 1588-ல் தங்க விக்கிரங்களையும், தங்க ஓடுகளால் வேய்ந்த கூரையையும் கொண்ட தெவிநுவரை விஷ்ணு ஆலயத்தையும் கி.பி. 1622-ல் பிரசித்தி பெற்ற திருமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும் இடித்துத் தரைமட்டமாக்கி, அங்கிருந்த அளப்பெரிய பொக்கிஷங்களையும் செல்வங்களையும் கொள்ளையிட்டனர்.

ஒலிவேரா தாங்கள் கடைப்பிடித்த கிறிஸ்தவ மதமே உண்மையான மதம் என்றும் மற்ற மதங்களெல்லாம் சாத்தானின் மதங்கள் என்றும் கருதும் பிடிவாத குணம் உள்ளவனாதலால் யாழ்ப்பாண வாசிகள் எல்லாம் கட்டாயமாக கிறிஸ்தவ மதத்தையே கடைப்பிடிக்கும்படி கட்டளையிட்டான். அவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கி.பி.1520 இல் இருந்து 1522-க்கு இடைப்பட்ட இரண்டு வருட காலத்தில் மட்டும் 20 அரச குடும்பத்தினரும், 150 பிராமணர்களும், மூன்று முதலியார்மாரும், 62 வன்னியர்களும், 400 பரதவர்கள் உட்பட 52,000 பேர் 'பிரான்சிஸ்கன் சபை' என்ற போர்த்துக்கேயரது மத மாற்ற சபையால் கிறிஸ்தவர்களாக்கப்பட்டனர் என்று கைறோஸ் என்னும் போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் எழுதி வைத்துள்ள வரலாற்றுக் குறிப்பிலிருந்து அறிய முடிகிறது.



போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை

- நக்கீரன்

படிப்பகம்